Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-19 01-04-2005 வெள்ளிக்கிழமை ஓசை 42



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11479) விநாயகர் வீதி, மயிலிட்டி.



## பொதுக்கட்டமைப்பு தாமதம்; புலிகள் மீது ஏவப்படும் வன்முறை; பின்லாந்து வெளி.விவ.அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் விபரிப்பு!

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு மற்றும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் குறித்து பின்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பின்லாந்து அரச பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் விளக்கமளித்துள்ளனர்.

பின்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் எர்கி துமியோஜா உள்ளிட்ட குழுவினரை ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பின்லாந்து அமைச்சக அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஆழிப்பேரலையால் உயிரிழந்தோருக்குப் பின்லாந்து அரசின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை

(IV ஆம் பக்கம் பார்க்க)

# அரச நிர்வாகம் ஊழல் நிறைந்து மோசமான நிலையில் உள்ளது!

## கடுமையாகச் சாடுகிறார் அரச தலைவி சந்திரிகா

(கொழும்பு)

**அரசாங்க நிர்வாகம் ஊழல் மோசடி நிறைந்து மோசமான நிலையிலுள்ளது. வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் தாதியர் ஒழுங்காகக் தமது கடமையைச் செய்வதில்லை. சுகாதாரத் திணைக்களத்தினர் வேலை நிறுத்தம் மேற்கொள்வது இலங்கையில் மட்டும்தான். உலகில் எங்குமே இப்படி நடைபெறுவதில்லை என அரச நிர்வாகத்தை கடுமையாச் சாடுகிறார் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

பயிற்சிக்கென 15ஆயிரம் தாதிமாரைச் சேர்த்தக் கொள்ளும் தேசியத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்ச்சி நேற்று சனாதிபதி தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் - புலிகள் அம்பாறையில் சந்தித்துப் பேச்சு

### அதிரடிப்படையின் அத்துமீறல் குறித்து ஆராய்வு

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் ரதன் பங்கேற்றார்.

படையினர் நடத்திவரும் சோதனை நடவடிக்கைகள், விசேட அதிரடிப் படையினரின் அத்துமீறல்கள் என்பவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அவர் இந்தச் சந்திப்பின்போது கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த போர் நிறுத்தக் கண்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மீ.சங்க சமாசத்திற்கு கடற்புலிகள் 6இலட். ரூபா நிதியுதவி

அம்பாறை மாவட்ட மீனவர் சங்க சமாசத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் ஆறு லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கினர். இதற்கான நிகழ்வு நேற்று மாலை தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட கடற்புலிப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்படுவோரின் வாழ்வுரிமையை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை!

### -காணாமற்போனோர் விவகாரத்தில் உயர் நீதிமன்று தீர்ப்பு

( கொழும்பு)

படையினராலோ அல்லது பொலிசாரினாலோ கைது செய்யப்படும் ஒருவர் காணாமல் போனால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் எனக் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது. கைது செய்யப்படும் ஒருவர் வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் அந்தத் தீர்ப்பில் சுட்டிக்காட்டி அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் நழுவி விட முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருகோணமலையில் சுற்றி வளைப்பு

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வாவின் 107 ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகரான தந்தை செல்வநாயகத்தின் 107 ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணிக்கு யாழ்.கோட்டையடியிலுள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் நடைபெற்றது.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பா.உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கவேண்டாமென எஸ்.பி.மனு

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தன்னை விலக்க வேண்டாமென சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குவதற்கு பாராளுமன்றச் செயலாளர் முயற்சித்துவருவதாக

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சரியானஆட்சி முறை இல்லாததால் நாடு அராஜக நிலையை அடைந்துள்ளது

### -ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

நாடு அராஜக நிலையை அடைந்து விட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. சரியான ஆட்சி முறை நாட்டில் இல்லாமை காரணமாகவே நாடு இந்த நிலையை அடைந்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர். இந்த அரசாங்கம் அவசர அவசரமாக சர்வசன வாக்கெடுப்புக்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறது இது தனி ஒருவருடைய தேவைக்காகவே முன்னெடுக்கப்படவுள்ளது. இது போன்ற நடவடிக்கைகளால் அரசாங்கம் மக்களை மறந்து சனாதிபதியின் தேவையை நிறைவேற்ற முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் ஊழல்

### விசாரணை ஆரம்பம்

இலங்கை, பொதுநம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளையும், ஆலோசனைகளையும் கோரியுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

# நூலகத் திறப்பு விழா



(ஓட்டுசுட்டான்)

முத்துஐயன்கட்டு வலதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலகம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று காலை 9.30 மணியளவில் வலதுகரை அ.த.க.பாடசாலை அதிபர் பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், ஓட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி. ஜெயபாலன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றி வைக்க நூலகத்தை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரட்ணம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கருத்துரைகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரட்ணம், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட பல முக்கியஸ்தர்களும் வழங்கினர். பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள், ஆசிரியர்கள், துறை சார்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

## துயர் பகிர்கின்றோம்

### அமரர் திருமதி ஜெயக்காந்தன்-ஜெயக்குமாரி

(பிரதம எழுதுனர், தமிழீழ நிர்வாகசேவை, கிளிநொச்சி மாவட்டம்)

கடந்த 29.03.2005 அன்று சாவடைந்த திருமதி ஜெ.ஜெயக்குமாரி அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பணிப்பாளர் நாயகம், நிதிமுகாமையாளர்,*
*பணியாளர்கள்,*
*நிர்மாணி ஒருங்கமைப்பு தலைமைப்பணிமனை,*
*கிளிநொச்சி.*

(5952)

## கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர் களுக்கான முக்கிய கலந்துரை யாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ப.நோ.கூ.சங்கங்கள், பனை, தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லை மாவட்ட சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லை மாவட்ட கூட்டுறவுச் சபை, முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான இந்த முக்கிய கலந்துரையாடல் புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையில் முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி. மோ. சிவமயம் அவர்களின் தலைமையில் நடைபெறயிருப்பதால் தவறாது குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (08)

## கண்ணீர் அஞ்சலி

1976 - 01 - 02



2005 - 03 - 29



### அமரர் திருமதி ஜெயக்காந்தன்-ஜெயக்குமாரி

(றஞ்சி)

பிரதம எழுதுனர்
தமிழீழ நிர்வாக சேவை,
கிளிநொச்சி மாவட்டம்.

29.03.2005ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமாகிய செய்தி அறிந்து நாம் பெரும் கவலையடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பொறுப்பாளர்,*
*பணியாளர்கள்,*
*தமிழீழ நிர்வாக சேவை,*
*முல்லைத்தீவு மாவட்டம்.*

(5815)

## 3ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மைந்தனாய் 05 10 1938



விண்ணில் மைந்தனாய் 02 03 2005

### வேலுப்பிள்ளை சண்முகம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கமலகுமாரி ரவீந்திரன் அவர்களின் அன்புத் தந்தை வேலுப்பிள்ளை சண்முகம் அவர்களின் பிரிவால் துயருறும் ஆசிரியைக்கும், அவரது உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள்,**
**கிளி/பிரமந்தனாறு ம.வி.**

(சி-11614)



ஓம்
சிவமயம்

## குஞ்சுப்பரந்தன் அருள்மிகு பொறிக்கடவை அம்மன் ஆலய



## பங்குனித்திங்கள் வேள்வி விழா - 2005

நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 22ஆம் நாள் 04.04.2005 திங்கட்கிழமை பகல், இரவு மறுநாள் அதிகாலை வரை வழமைபோல் அதிசிறப்பாக வேள்வி விழா நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**


- பகல் அபிஷேக ஆராதனைகள், கொடியேற்ற வைபவம், விசேட பூசை
- மகேஸ்வர பூசை (அன்னதானம்)
- பகல், இரவு முழு நாளும் காவடி, பாற்செம்பு, கற்பூரச் சட்டி நேர்த்தி, பறவைக்காவடி, சிறப்பு நிகழ்ச்சிகள்.
- இரவு அம்பிகை வீதி உலா வருதல்
- பொங்கல், தீக்காவடி மிதிப்பு
- அதிகாலை விசேஷ பூசை
- நீர்ச்சோறு வழங்கல்

வணிக நிறுவனங்கள் அமைப்பவர்கள் 01.04.2005, 03.04.2005 ஆகிய இரு தினங்களிலும் அறங்காவலர் சபையினரிடம் பதிவு செய்து தங்கள் நிறுவனங்களை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பொறிக்கடவை,
குஞ்சுப்பரந்தன். (5956)

இங்ஙனம்
**ஆலய அறங்காவலர் சபையினர்.**

## ஈர நினைவுகளுடன்!



### மேஜர் புகழமுதன்

**வீரச்சாவு:-26.03.2005**

*கொடியவரின் கொலைப்பசிக்கு*
*குருதிக் கொடையளித்த எம்*
*குலத்தவனே! புகழ் - அக்*
*கொடியவனின் குரல்வளை*
*எடுப்போம் விரைவினில் என*
*உன் விதைகுழி மீது சபதமெடுப்போம்.*

எம்நேசத்துக்குரியவனுடன் காவியமான இறைமாறனை யும் நினைவினில் கொண்டு

என்றும் உன் தடம்
தொடரும்:- பாசஉறவுகள்

(5953)

# போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## –தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியம் அறிக்கை

(தென்மராட்சி)

**போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்படல் வேண்டும் என தென்மராட்சி பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யுத்தத்தினால் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையும், யுத்த நிறுத்தமும் தமிழ் மக்களாகிய எமது வாழ்வில் எத்தகைய விளைவையும் தரவில்லை. பதிலாக இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசாங்கமானது யுத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இராணுவத்தையும், தேசவிரோதக் குழுக்களையும் வளர்ப்பதுடன் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேச விரோதக் குழுக்கள் முகாம் அமைத்து இருக்க அனுமதியளித்துள்ளது.

இதன் மூலம் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களைப் படுகொலை செய்வதும், நீதிகேட்டு சனநாயக வழியில் போராடும் பொதுமக்களைத் தாக்குவது என தமிழ் மக்களுக்கெதிரான வழமையான அடாவடித்தனங்களையும் அராஜகங்களையும் அரங்கேற்றி வருகின்றது.

அண்மைக் காலத்தில் இராணுவ அத்துமீறல்கள் அதன் உச்சத்தை அடைந்துள்ளன. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட வகையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் அதிகரிதுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழ்மக்களும் மீண்டும் மீண்டும் பொறுமையைக் காத்து வரும் வேளையில் அவர்களை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசும், இராணுவமும் மிகத் தீவிரமாகச்செயற்பட்டு வருகின்றது என்பது தற்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ் விடயத்தில் சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட்டு இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்துவதுடன் எமது நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு உதவ வேண்டும் என அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (28)

# கல்வியியற் கல்லூரி ஆணையாளர் பகிடிவதை தொடர்பாக விசாரணை

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டாம் வருடஆசிரியப்பயிலுநர் முதலாம் வருட ஆசிரியப் பயிலுநர்கள் மீது மேற்கொண்ட மிக மோசமான பகிடிவதை தொடர்பான விசாரணைகளை நேற்று கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரிகளின் ஆணையாளர் திருமதி எஸ். தர்மலதா மேற்கொண்டார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இவ் விசாரணையின்போது முதலாம் வருட ஆசிரியப்பயிலுனர்கள் தம் மீது மேற்கொள்ளப்பட்ட பகிடிவதை தொடர்பாக அழுதழுது கூறினர். அத்துடன் பகிடிவதைகளை மேற்கொண்ட சிலரை இனங்காட்டியுமுள்ளனர். இரண்டாம் வருட ஆசிரியர்ப்பயிலுனர்கள் பகிடிவதையைத் தாம் மேற்கொள்ள வில்லை எனக்கூறியபோதும்,பகிடிவதை மேற்கொள்ளப்பட்டிருந்தமை முதலாம் வருட ஆசிரியாப் பயிலுநர்கள், விடுதி மேற்பார்வையாளர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் சாட்சியங்கள் மூலமும் வைத்தியசாலை மருத்துவ அறிக்கைகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பகிடிவதை மேற்கொள்ளப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளமையால் கல்லூரி ஒழுக்காற்றுச் சபையை உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர் பணித்தார். கல்வியியற்கல்லூரிகளில் பகிடிவதைக் கலாச்சாரம் தொடராது இருக்கத்தக்க வகையில் கல்லூரிஒழுக்காற்றுச் சபையால் எடுக்கப்படும் நடவடிக்கை அமையவேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

எனவே இது தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்காக கல்லூரி ஒழுங்காற்றுச்சபை எதிர்வரும் திங்கட்கிழமை கூட உள்ளதாக பீடாதிபதி . க. பேர்னாட தெரிவித்தார். (10)

# யாழ்.பல்கலை. கல்விசாரா ஊழியரின் போராட்டம் முடிவுக்கு வந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டமானது நேற்று பி.ப.2.30 மணியுடன் தற்காலிக முடிவுக்கு வந்து ஊழியர்கள் அனைவரும் கடமைக்குத் திரும்பினர்.

பல்கலைக்கழக பதிவாளராகக் கடமையாற்றிய திருமதி தங்கராஜா என்பவர் மேற்கொண்ட நிதி மோசடி காரணமாக அவர் தற்காலிகமாக பணிநிலையில் இருந்து விலக்கப்பட்டார். அதன்பின்னர் மீண்டும் அவரைக் கடமைக்கு வரவழைக்க துணைவேந்தர் மேற்கொண்ட முயற்சியால் அவரை மீளவும் கடமைக்கு அமர்த்த முடிவு எடுக்கப்பட்டது. இதனை எதிர்த்து கல்வி சாரா ஊழியர்கள் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் தமது கடமைகளை பகிஷ்கரித்தனர். இதனால் விரிவுரைகள் எவையும் இடம்பெறவில்லை. எனவே இதனை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுக்கும், துணைவேந்தர், பீடாதிபதிகள், சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர், ஊழியர் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 11 மணியளவில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் பதிவாளரைக் கடமைக்கு அமர்த்துவது தொடர்பான இறுதி முடிவு எடுப்பதற்காக எதிர்வரும் ஒன்பதாம் திகதி விசேட பல்கலைக்கழக பேரவை கூட்டம் ஒன்றினைக் கூட்டுவதாக தீர்மானிக்கப்பட்டதையடுத்து ஊழியர்கள் கடமைக்குத்திரும்பினர். இதனையடுத்து அனைத்து விரிவுரைகளும் வழமைபோன்று எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 36)

### -ஒரு சதமேனும் உதவி கிடைக்கவில்லை என்ற-

# சந்திரிகாவின் கூற்றுக் குறித்து துருக்கி செம்பிறைச் சங்கம் விசனம்

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தினால் உறுதி அளிக்கப்பட்ட நிதிகளில் ஒரு சதமேனும் கிடைக்கவில்லையென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தமைக்கு துருக்கி செம்பிறை அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் துருக்கி செம்பிறை அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்த சமயம் அவர்கள் இவ்வாறு ரவூப ஹக்கீமிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்புக் கூறுகையில் சுனாமி நிவாரணப் பணிக்கென இலங்கை வங்கியில் உருவாக்கப்பட்டிருக்கும் சனாதிபதி விசேட நிதியத்தில் துருக்கி 1.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை சுனாமி நிவாரணம் மற்றும் உடனடிக் கட்டுமானப் பணிக்காக காசாக வழங்கி இருப்பதாகவும், இந்நிதி சனாதிபதி நிதியத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

அத்துடன் மற்றுமொரு ஆறு மில்லியன் அமெரிக்க டொலர்களை சனாதிபதி நிதியத்தில் வைப்பிலிடப் போவதாகவும் அந்த அமைப்பு மேலும கூறியுள்ளது.

# சாவகச்சேரி தபால் அதிபர் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதம தபால் அதிகாரியாகிய பொன். தெய்வேந்திரன் யாழ். அஞ்சல் அத்தியட்சகர் மற்றும் வட மாநில அஞ்சல் அதிபர் பழிவாங்கும் நோக்குடன் தன்னைப் பதவி இறக்கம் செய்திருப்பதாகக் கூறி யாழ். மனிதஉரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தன்னுடைய நற்பெயருக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்குடனும், தன்னைப் பலமுறை பழிவாங்கும் நோக்கத்துடனும் இடம் மாற்றம் செய்திருப்பதாகவும் தற்பொழுது கடைசி நடவடிக்கையாக எந்தவொரு சட்ட விதிகளையும் பின்பற்றாமல்- புதிய சட்டங்களைத் தனனிச்சையாக உருவாக்கித் தன்னை எப்படியும் இப்பணியில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் இவ்வாதிகாரிகள் பதவி இறக்கம் செய்திருப்பதாகவும், இதனால் தன்னுடைய கௌரவமும் குடும்பச் சூழலும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் நீதியான விசாரணை நடத்தி தனி மனித உரிமையைக்காக்கும்படி இவ்வதிகாரி மனித உரிமை ஆணைக குழுவில் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. (28)

# தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி குறித்துக் கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தின் மீள் கட்டுமானம், புனர் நிர்மாண அபிவிருத்தி தொடர்பான கூட்டம் வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி றிபோக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்துக்கு யாழ். மாவட்ட துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளவுடன், இக்கூட்டத்தில் மீள் கட்டுமானப் பணிகளில் தன்னார்வமுள்ளவர்கள் கலந்து கொண்டு கிராமிய, அபிவிருத்தி, நகர அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகளையும், ஒத்துழைப்பினையும் வழங்கும்படி கூட்ட ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(28)

## கல்விமாணிப்பட்டநெறி விரிவுரை (2004-2006)

கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் நடைபெறும் கல்வி மாணிப் பட்டநெறியின் முதலாம் வருட விரிவுரை வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறமாட்டாது. மீண்டும் வரும் ஒன்பதாம் திகதி வழமை போல விரிவுரை நடைபெறும். ஆசிரிய மாணவர்களைத் தவறாது சமூகம்தரும்படி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தே.புவனேஸ்வரன் கேட்டுக் கொள்கின்றார்.

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும்

(வவுனியா)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்தவாரம் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தமையால் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணி தாமதமாகியது. எனினும் பாடசாலைகளின் முதலாம் தவணை விடுமுறைக்கு முன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்தமைக்கமைவாக அடுத்தவாரம் பாடசாலைகள் விடுமுறை விடுவதற்கு முன்னதாக இப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிட்டு வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## துவிச்சக்கர வண்டி வழங்கல்

யாழ். குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகளை வழங்கும் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் 420 பேருக்கு இதுவரையில் மனித நேய அமைப்புக்கள் ஒன்றியத்தினரால் தலா ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதைவிட மேலும் 190 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன. பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (33)

# மென்பந்து கிரிக்கெட்போட்டி ஸ்கந்தா அணி சம்பியன்

(அலுவலக செய்தியாளர்)

கரச்சிப்பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற 2005ஆம் ஆண்டிற்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் ஸ்கந்தா அணி சம்பியனானது.

ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் அடங்கிய இப்போட்டி நேற்றுக் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மத்தியதீரர் விளையாட்டுக்கழகம் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப்பெற்றது.இதில் தினேஸ்குமார் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 37 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஸ்கந்தா அணி நான்கு ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை (37) அடைந்தது. இதில் பா. செல்வகுமார் ஆட்டமிழக்காது பத்து ஓட்டங்களைப் பெற்றார்.

இதேவேளை நேற்று சம்பியனான ஸ்கந்தா அணி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில் தொடர்ந்து ஆறு தடவை சம்பியனானது குறிப்பிடத்தக்கது.நேற்றைய இறுதிப்போட்டிக்கு நடுவர்களாக பூ. சுபானந் ,ப .சாரங்கன ஆகியோர் கடமையாற்றினார்கள். (கு)

# சுனாமியால் உயிரிழந்த அரச ஊழியரின் சம்பளம் 55 வயது வரை வழங்க முடிவு

சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்த அரச ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளத்தை அவர்களின் 55 வயது வரை அவர்களின் குடும்பங்களுக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. உயிரிழந்த அரச ஊழியர்கள் சுனாமி ஏற்பட்ட தினம் தமது கடமையில் ஈடுபடாத போதும், இச்சலுகை வழங்கப்படும் எனப்பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# அரசு மானியம் வழங்காவிடில் பெற்றோல் விலை அதிகரிக்கும்

## — பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

பெற்றோலியக்கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி நிறுத்திய மானியத்தை மீண்டும் வழங்காவிட்டால் பெற்றோலியப் பொருட்களுக்கான விற்பனை விலையை அதிகரிக்க வேண்டியநிலை ஏற்படும் என பெற்றோலியக்கூட்டுத்தாபனப் பணிப்பாளர் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திறைசேரி இதுவரை ஒரு லீற்றர் பெற்றோலுக்கு ஆறு ரூபாவும், ஒரு லீற்றர் டீசலுக்கு எட்டு ரூபாவும் மண்ணெண்ணெய்க்கு 14 ரூபாவும் சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மானியமாக வழங்கி வந்தது.

எனினும் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இம்மானியம் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் எரிபொருளை குறைந்த விலையில் வழங்குவது கடினமாக இருப்பதனால் எரிபொருள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாய்க்கு அறவிடப்படும் வரியைச் செலுத்தாது விட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாவும், ஒரு லீற்றர் டீசலுக்கு இரண்டு ரூபாவும் வரியாகச் செலுததப்பட்டு வந்தது. மானியத்தை நிறுததியதால் இந்தவரியைச் செலுத்த முடியாத நிலையில் பெற் றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளது. இந்த வரியைச் செலுத்துமாறு அரசாங்கத்தால் நெருக்குவாரம் கொடுக்கப்படுமிடத்து மானியமாக வழங்கிய அத்தொகை அலகொன் றுக்கு விற்பனை விலையுடன் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (32)

# மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வாகரையில் மக்கள் நேற்றுப் பேரணி

(மட்டக்களப்பு)

வாகரைப் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மக்கள் பேரணி நேற்று இடம்பெற்றது. இதில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள்,அதிபர்கள்,துறவியர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இதில் முக்கிய கோரிக்கைகளாக, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்துதல், பொதுக்கட்டமைப்பை உருவாக்கல், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்தல் என்பன முன்வைக்கப்பட்டன.

பேரணியின் முடிவில் அரச அதிபர் ஊடாக, பிரதமர், சனாதிப்தி, வெளிநாட்டுத் தூதரகங்கள் என்பனவற்றிற்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இப்பேரணி வாகரைப் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

### சரியான...

அரசாங்கத்தின் நிர்வாகம் சீரின்மையை வெளிக்காட்டும் வகையில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட மற்றும் அமைச்சர் ஜெயராஜ் பொனாண்டோபுள்ளே ஆகியோர் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

இதேவேளை இந்த ஊடக மாநாட்டில் கருத்துரைத்த கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க கடந்த மூன்று மாதங்களுக்குள் வாழ்க்கை செலவு மட்டம் 15 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக மக்களின் வாழ்கையின் மீது பாரிய சுமை சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கமோ இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் சனதிபதியை மீண்டும் பதவிக்குக் கொண்டு வருவது எப்படி என்பது குறித்து ஆராய்ந்து கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

### அரச...

தெரிவிக்கையில், வடக்கு-கிழக்குப் பிரச்சினையால் தான் அரசாங்கத்தின் கொள்கையை சரியாகக் கடைப்பிடிக்க முடியவில்லையென சிலர் கூறுகின்றனர். அப்படியல்ல, நிர்வாகத்திலுள்ளோர் ஊழல், மோசடியில் ஈடுபடுவதாலேயே நிர்வாகம் சீர்கெட்டுள்ளது. கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு நேரில் சென்று பார்த்தால் நான் சொல்லுவதை நேரில் பார்க்க முடியும் எனத் தெரிவித்துள்ள சனாதிபதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை ஆகியன அரச வங்கிகளுக்கு பத்தாயிரம் கோடி ரூபாவைக் கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளன.

இந்நிறுவனங்களை தனியார்மயப்படுத்தாமல் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு கம்பனிகளுக்கு விற்காமல் அவற்றை மறுசீரமைத்துப் பலப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்து இவ்விரு நிறுவனங்களையும் முன்னேற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களை விட அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. இந்நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி, என்பன பெருமளவு கடனுதவியை வழங்க முன் வந்துள்ளன. குறைந்த நடவடிக்கையுடனான இக்கடனை 40 வருடங்களில் திருப்பிச் செலுத்த முடியும். ஆனால், ஊழியர்களின் வேலை நிறுத்தம் சாதரணமாக இதனைச் செய்ய முடியாதுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார்.

### பொது...

இந்த விடயம் தொடர்பான ஆலோசனைகளையும், முறைப்பாடுகளையும் பொதுமக்கள் சிறிலங்கா புத்தசாசன அமைச்சிடம் கையளிக்கலாமென அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விசேட ஆணைக்குழு பொதுநம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, அதற்கான அறிக்கையினை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்குமெனவும் அறிவிக்கப்படுகிறது.

புத்தசாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்த விசேட ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சமரவீரவை நியமித்துள்ளார்.

### பொதுக்கட்டமைப்பு...

தமிழ்ச்செல்வன் குழுவினரிடம் அமைச்சர் எர்கி பகிர்ந்து கொண்டார்.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான மனிதாபிமான அடிப்படையிலான அனைத்து மீளமைப்புப் பணிகளுக்கும் பின்லாந்து அரசு உறுதியாக ஆதரவளிக்கும் என்று அவர் மீண்டும் உறுதியளித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடித்திருப்பதன் அவசியத்தையும் அமைதிப் பேச்சுகளை முன்னெடுத்துச் செலலும் ஒரு வாய்ப்பாக ஆழிப்பேரலையின் பாதிப்புகள் உருவாகியுள்ளன என்றும் பின்லாந்து அமைச்சர் கூறினார்.

இது குறித்து விளக்கம் அளித்த சு.ப.தமிழ்ச்செல்வன், பொதுக்கட்டமைப்புக் குறித்து இணக்கப்பாட்டிற்கு வராமாலும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்தாமலும் இருக் கிறது. உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ்மக்களின் வதிவிடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தமிழ்மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கையை சிறிலங்கா அரசு சிதைத்துக் கொண்டு இருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

தமிழ்மக்கள் அமைதி முயற்சிகளின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என்றும், பொதுக்கட்டமைப்பை உடனே உருவாக்கி ஆழிப்பேரலை பாதிப்பின் மீளமைப்புப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்றும் பின்லாந்து அமைச்சரிடம் சு.ப. தமிழ்ச்செல்வன் கோரினார்.

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களின் வன்முறைகள் குறித்தும் பின்லாந்து அமைச்சரிடம் விபரித்த தமிழ்ச்செல்வன், இது யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளை மீறும் செயல் என்றும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பின்போது பின்லாந்து அமைச்சர் எர்கியுடன் அமெரிக்க ஆசிய நாடுகளுக்கான பின்லாந்து அரசுத்துறையின் இயக்குநர் திருமதி எலினா ஹால்கு, ஆசிய அமெரிக்கப் பிராந்தியத்துக்கான தூதர் மைக்கோ பைகாலா, அமைச்சரின் சிறப்பு ஆலோசகர் போல்க் சன்மேன் ஆகியோர் உடனிருந்தனர்.

நேற்று முன்தினம் மற்றுமொரு சந்திப்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் பின்லாந்து உச்ச நீதி மன்ற நிர்வாகத்தலைவர் டாக்டர் பெக்காகோல்பேக் உள்ளிட்ட குழுவினருடன் சட்டம் ஒழுங்கை செயற்படுத்தும் முறை பற்றிக் கலந்துரையாடினர்.

இதன்போதுஉச்சநீதிமன்ற நிர்வாகக் கட்டமைப்பு பற்றி விடுதலைப்புலிகளுக்கு நிதர்சனமாக எடுத்துக்காண்பிக்கப்பட்டது. இதில் நீதிபதி ஒலொப் ஒல்சன் உச்ச நீதிமன்ற நீதிபதி நீலோ ஜாஸ்கினென், மனிதஉரிமைகளின் விசேட ஆலோசகர் றௌனோ மெறிசாறி வெளிநாட்டலுவல்கள் அமைச்சரவையின் திட்ட உதவியாளர் செல்வி சினிசெடெர் குறுரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்னர் தமிழீழ அரசியல் குழுவினர் அலன் தீவுகளிற்கான பின்னிஸ் பாராளுமன்ற உறுப்பினர் றோஜர் ஜான்சனையும் சந்தித்தனர்.

# பொறியியல் ஆய்வுகூட திறப்பு விழா இன்று

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கட்டடத் திணைக்கள வளாகத்திற்குள் பொறியியல் ஆய்வுகூடம் ஒன்று இன்று நண் பகல் 12.00 மணிக்கு வைபவ ரீதியாக நிகொட் திட்டப் பணிப்பாளர் T.லங்காநேசன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.மேற்படி பொறியியல் ஆய்வு கூடமானது நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் கட்டப்பட்டுள்ளது. ரூபா ஏழு லட்சம் செலவில் அமைக்கப்பட்ட இவ் ஆய்வு கூடத்தில் பல லட்சம் பெறுமதியான பொறியியல் உபகரணங்கள் இருப்பதாகப் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆய்வுகூடத் திறப்பு விழாவிற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் புரியும் பொறியியலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கட்டடத்திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் கேட்டுக் கொள்கின்றார். (08)

# கொழும்பில் நில அதிர்வு

கொழும்பிலும், கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலும் நேற்றுக் காலை இலேசான நில அதிர்வு உணரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு நகரிலும், கொள்ளுப்பிட்டி மற்றும் வத்தளைப் பகுதிகளிலும் இவ்வதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8.40 மணி அளவில் சிறு நில அதிர்வுகள் இடம்பெற்று இருப்பதனை கருவிகள் காண்பித்திருப்பதாக பல்லேகெலவில் இருக்கும் பூமி அதிர்வினைப் பதிவு செய்யும் நிலையம் அறிவித்துள்ளது. எனினும் இதனால் எதுவித பாதிப்பும் இல்லை என்றும் பேரலைகளை ஏற்படுத்தக்கூடிய அளவில் இவை பாரியளவில் இடம்பெறவில்லை என்றும் சிறிலங்கா காலநிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### பா.உறுப்பினர்...

வும்,இதனைத் தடுத்துநிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிடவேண்டுமெனவும் எஸ்.பி.திஸாநாயக்க தாக்கல் செய்துள்ள மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேல் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க இரண்டு வருடம் கடுழியச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

### கண்காணிப்புக்...

காணிப்புக் குழுவின் மாவட்டப் பொறுப்பாளர், படையினரின் சீண்டலின் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுமையாக இருப்பதை வரவேற்றார். அதேவேளை, மாவட்டத்தில் இடம்பெறும் சம்பவங்களை நிறுத்தத் தாம் உரிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்போவதாகவும் அவர் உறுதியளித்தார்.

### தந்தை...

ஜெபநேசன் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவாலயத்திலுள்ள தந்தை செல்வநாயகத்தின் உருவச்சிலைக்கான மலர் மாலையினை ஆயர் ஜெபநேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோர் அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலரும் தந்தை செல்வாவின் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினர். (33)

### அம்பாறை....

பொறுப்பாளர் இலக்கியன் தலைமை தாங்கினார். அத்துடன் நிகழ்வில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மற்றும் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரும் பங்கேற்றனர்.

### கைது...

நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன சகோதரர்கள் இருவர் தொடர்பான வழக்கு விசாரணையின் முடிவில் இந்தத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியது. நீதியரசர் சிரானி பண்டார நாயக்க தலைமையிலான நீதியரசர் குழு இந்த வழக்கை விசாரணை செய்தது.1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி திருகோணமலையைச் சேர்ந்த மச்சவல்லவன் ஆறுமுகம் மற்றும் மச்சவல்லவன் மகேந்திரராஜா ஆகியோர் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனார்கள். குறிப்பிட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்பதால் உரிமை கோரும் உறவினருக்கு தலா ரூபா மூன்று இலட்சம் நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் மற்றொரு உத்தரவையும் பிறப்பித்துள்ளது.


## பணிநிலை வேண்டுகை

ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு ஒப்புநோக்குநர், ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** ஒப்புநோக்குநர்

**அகவை :-** 25இற்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும் (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**கல்வித்தகைமை :-** க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்கள் அல்லது அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

**ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் :-**
முன் அனுபவமும் அரசியல் குறித்த துறைசார்ந்த அறிவும் உடையோர் விரும்பத்தக்கது.

குறிப்பு:- உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

வேதனம்:- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் 06.04.2005(புதன்கிழமை)காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்குச் சமூகம் தரவும்

**நிர்வாகம்**


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது